மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு. M. ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., LLM.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
2026– ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20–ஆம் நாள் திங்கட்கிழமை
இடைக்கால மனுஎண்.15/2026 ல் அசல் வழக்கு எண்.142/2021
**CNR.No. TNTT-08-000017-2020**

1.ஹரிஹரபுத்திரன்(இறப்பு)
2.தா.பேரின்பராஜ்
3.தா.மாசிலாமணி(எ)கண்ணன்
4.பாக்கியம்(இறப்பு)
5.விமலா
6.ஞானரத்தினம்
7.அல்பால்
8.ரமேஷ் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1.சரோஜா
2.பாஸ்கரன்
3.முருகேஷ் சுந்தர்
4.அன்புச் செல்வி
5.மாரிமதன் ராஜ்
6.சரஸ்வதி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஜெயசிங் மதுரம் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஆறுமுக பெருமாள் அவர்கள் முன்னிலையாகியும், 6ம் எதிர்மனுதாரர் தோன்றாத் தரப்பினராகி உள்ள நிலையிலும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் செய்து கொண்ட வாத உரைகளை கேட்டறிந்தும், மனு சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று (20.04.2026)இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

வழக்குரையை திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டி உரிமையியல்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.20 17:51:36 +0530

நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனு சுருக்கம்:**

அ) தாவா சொத்துக்களில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட 1/2 பாகத்தை பிரிவினை செய்து தரக்கோரி கூட்டு உரிமையாளர்களான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கூட்டாக அனுபவித்து வரும் தாவா சொத்தினைப் பொறுத்து 8ம் மனுதாரரின் தந்தையின் உடன்பிறந்த சகோதரர் செல்லத்துரை அவரது மனைவியான 1ம் எதிர்மனுதாரருக்கு 08.04.2019ம் தேதிய ஏற்பாடு ஆவணத்தை பிறப்பித்த காரணத்தால் இவ்வழக்கு தாக்கல் செய்யும் அவசியம் ஏற்பட்டது. மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுதாரர்களின பாக உரிமையை கட்டுப்படுத்தக்கூடியதல்ல. ஆவணத்தின் தன்மை குறித்து வழக்கில் பரிகாரம் கோரப்படாமல் தவறுதலாக விடுபட்டுள்ளது.

ஆ) ஆவணத்தின் தன்மை குறித்து விளம்புகை கேட்டு வழக்குரையில் கூடுதல் பரிகாரம் கோருவதற்காக வழக்குரையை சீர்த்திருத்தம் செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கூடுதல் பரிகாரம் கோருவதன் காரணமாக கூடுதல் சாட்சியம் எதுவும் எழாது. கூடுதல் பரிகாரத்தின் காரணமாக இருதரப்பினரின் இடையே எழும் பிரச்சனைகளுக்கு முழுமையான தீர்வு காண இயலும். எனவே, அ பரிகாரத்தை தொடர்ந்து ஏற்கனவே குறிப்பிட்டுள்ள ஆ பரிகாரத்தை இ பரிகாரமாக மாற்றியும், ஆ பரிகாரமாக 08.04.2019ல் 1ம் பிரதிவாதி சரோஜா அம்மாளுக்கு செல்லத்துரை பிறப்பித்து கொடுத்த பதிவு செய்யப்பட்ட பெருங்குளம் சார்பதிவகம் ஆவண எண்.301/2019 வாதிகளின் கூட்டு உரிமையாளர் என்ற நிலையிலான சொத்துரிமையை கட்டுப்படுத்தாது என்று விளம்புகை செய்ய வேண்டும் என்று வழக்குரையை சீர்திருத்தம் செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்:**

அ) மனுதாரர்கள் கூட்டாக அனுபவித்து வரும் தாவா சொத்தினை பொறுத்து ஹரிஹரபுத்திரனின் உடன் பிறந்த சகோதரர் செல்லத்துரை மனைவியான 1ம் பிரதிவாதிக்கு 08.04.2019ம் தேதிய ஏற்பாடு ஆவணத்தை பிறப்பித்த காரணத்தாலேயே இவ்வழக்கு தாக்கல் செய்யும் அவசியம் ஏற்பட்டது என்பதும்,



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.20 17:51:39 +0530

மேற்கண்ட ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதும். மனுதாரர்களின் பாக உரிமையை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்பதும் உண்மையல்ல. ஆவணத்தின் தன்மை குறித்து வழக்கில் பரிகாரம் கோரப்படாமல் தவறுதலாக விடுபட்டுள்ளது என்பதும் உண்மையல்ல.

ஆ) 08.4.2019ம் தேதிய ஏற்பாடு ஆவணம் செல்லத்துரைக்கு குடும்பத்தில் செய்து கொண்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் புல எண்.71/11ல் 15 செண்ட் நிலம் கிடைத்து அதை அவரது மனைவி 1ம் எதிர்மனுதாரர் சரோஜாவிற்கு எழுதிக் கொடுத்துள்ளார். மேற்டி ஆவணத்தில் உள்ள சொத்தில் மனுதாரர்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. மனுதாரர் இம்மனுவில் கேட்டுள்ள பரிகாரம் இயற்கை நீதியின்படி கிடைக்கக்கூடியதல்ல. உண்மையில் நடந்த பொருண்மைகளை மறைத்து காலம் கடந்து வழக்கு தீர்ப்பிக்காக உள்ள நிலையில் புதியதொரு பரிகாரம் கோரி வழக்கை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என வழக்கை காலதாமதம் செய்யும் நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும்.

<u>4.தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை</u>

அசல் வழக்குரையை திருத்தம் செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா? அல்லது இல்லையா? என்பது தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

<u>தீர்வு</u>

5. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கு எண்.142/2021ன் வாதிகள். எதிர்மனுதாரர்கள் அதன் பிரதிவாதிகள் ஆவர். 6ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினராக உள்ளார். அசல் வழக்கானது, தபசில் சொத்தில் வாதிகளுக்குரிய 1/2 பாகத்தினை பிரித்து தரக் கோரி பாகப்பிரிவினை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கானது ஆரம்பத்தில் 1 முதல் 3 மனுதாரர்களால் மட்டும் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கிடை காலத்தில் 1ம் மனுதாரர் இறந்ததை தொடர்ந்து



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.20 17:51:42 +0530

அவரது வாரிசுகளாக 4 முதல் 8 மனுதாரர்கள் வாதிகளாக கட்சி சேர்க்கப்பட்டு வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் 8ம் வாதி வா.சா.ஆ.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 2ம்பிரதிவாதி பி.சா.1 ஆகவும், கோபால் என்பவர் பி.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. அசல் வழக்கில் கடந்த 26.03.2026ம் தேதி இருதரப்பு வாத உரை முடிவுற்று 06.04.2026ம் தேதி தீர்ப்புக்காக வாய்தா ஏற்படுத்தப்பட்ட நிலையில், வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் கடந்த 02.04.2026ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 08.04.2019ம் தேதி 1ம் எதிர்மனுதாரருக்கு அவரது கணவர் செல்லத்துரை எழுதிக் கொடுத்த பெருங்குளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.301/2019 வாதிகளின் கூட்டுரிமையாளர் என்ற நிலையிலான சொத்துரிமையை கட்டுப்படுத்தாது என விளம்புகை செய்ய வேண்டும் என்று வழக்குரையை திருத்தம் செய்யக் கோரப்பட்டுள்ளது.

7. 1ம் எதிர்மனுதாரரின் கணவர் செல்லத்துரைக்கு குடும்பத்தில் நடந்த வாய்மொழிப் பாகப்பரிவினையில் புல எண்.71/11ல் 15 செண்ட் கிடைத்து அதை 1ம் எதிர்மனுதாரருக்கு 08.04.2019ம் தேதி ஏற்பாடு செய்து கொடுத்துள்ளதால் அதில் மனுதாரர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும், தீர்ப்புக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் வழக்கினை காலதாமதம் செய்யும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிருரையில் சொல்லப்பட்டுள்ளது. வழக்குரையில் மேற்படி 08.04.2019ம் தேதிய ஏற்பாடு ஆவணம் சட்டப்படி செல்லாது எனவும், வாதிகள் மற்றும் 6ம் பிரதிவாதியின் பாகத்தை கட்டுப்படுத்தாது என்று சங்கதிகள் முன்னிட்டு அதன்படி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.

8. மேற்படி 08.04.2019ம் தேதிய ஏற்பாடு ஆவணம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் கணவர் செல்லத்துரைக்கு புல எண்.71/11ல் 15 செண்ட் குடும்ப வாய்மொழிப் பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பது குறித்து இம்மனுவில் தீர்வு


HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.20 17:51:45 +0530

காண இயலாது. அசல் வழக்கில் எழுந்துள்ள பிரச்சனைகளுக்கு அறுதியாகவும், இறுதியாகவும் தீர்வு காண வழக்குரையில் சீர்திருத்தம் செய்யக் கோரியுள்ள விவரங்கள் உதவுமா? அல்லது இல்லையா? என்பது குறித்து தான் இம்மனுவில் தீர்வு காண வேண்டும்.

9. காலதாமதமாக வழக்குரையை திருத்தம் செய்யக் கோரி மனு தாக்கல் செய்துள்ளதால் மட்டுமே அதனை தள்ளுபடி செய்யக் கூடாது என்று மனுதாரர்கள் தரப்பில் சுட்டிக்காட்டியுள்ள **சுரேந்திர குமார் சர்மா எதிர் மக்கன் சிங் 2009 AIR SCW 6131** எனும் வழக்கில் மேன்மைமிகு உச்சநீதிமன்றம் சொல்லியுள்ளது. 08.04.2019ம் தேதிய ஏற்பாடு ஆவணம் சம்பந்தமாக ஏற்கனவே வாதி தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணம் முன்னிடப்பட்டுள்ளன. இந்நிலையில், மேற்படி ஆவணம் வாதிகளின் கூட்டுரிமையாளர் நிலையினை கட்டுப்படுத்தாது என்ற விளம்புகைப் பரிகாரம் கோருவது தொடர்பான திருத்தத்தினை அனுமதிப்பது இருதரப்பினர்களுக்கு இடையேயான உண்மையான பிரச்சனைகளை தீர்வு காண்பதற்கு உதவியாக அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. அவ்வாறு உண்மையான பிரச்சனைகளை தீர்வு காண்பதற்கு உதவும் விசயங்களை பொறுத் வழக்குரையை திருத்த அனுமதிக்கலாம் என்று மனுதாரர்கள் தரப்பில் சுட்டிக்காட்டியுள்ள **மௌண்ட் மேரி எண்டர்பிரைசஸ் எதிர் M/S ஜிவ்ரத்னா மெடி டிரீட் பிரைவேட் லிமிடெட்(Civil Appeal No.1323/2015 நாள் 30.06.2015**) எனும் வழக்கில் மேன்மைமிகு உச்ச நீதிமன்றம் சொல்லியுள்ளது. இம்மனுவினை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு பாதிப்பும், இழப்பும் ஏற்படப்போவதில்லை. மேலும், வா.சா.1ன் முதல் விசாரணையில், 4ம் மனுதாரர்/4ம் வாதி இறந்துவிட்டதாக சொல்லியுள்ளார். 4ம் வாதியின் இறப்பு பதிவு செய்யப்பட்டு அவரது வாரிசு பற்றிய சங்கதிகள் பதிவு செய்யப்படாமல் உள்ளது. ஆகவே, அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. 4ம் வாதி 1ம் வாதியின் மனைவி ஆவார். 1ம் வாதியின் வாரிசுகள் அசல் வழக்கில் 4 முதல் 8 வாதிகளாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளனர். 4ம் வாதியின் இறப்பு குறித்து வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மேலே

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.20 17:51:48 +0530

விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில், இம்மனுவினை செலவுத் தொகையின் பேரில் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11.முடிவாக,**

**இம்மனு ரூ.500/– செலவுத் தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துப்பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 20.04.2026 அன்று உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.20 17:51:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் – இல்லை –

மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் –இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் –இல்லை–

எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் -இல்லை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.20 17:51:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.